செய்தி வெளியீட்டு எண்.100 நாள்.16.02.2017

**திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கத்தில் மேல்நிலை மற்றும் இடைநிலை பொதுத்தேர்வுகளை முன்னிட்டு முன்னேற்பாடுகள் குறித்த ஆய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

~~~~~

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கத்தில் மேல்நிலை மற்றும் இடைநிலை பொதுத்தேர்வுகளை முன்னிட்டு முன்னேற்பாடுகள் குறித்த ஆய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

மேல்நிலைப் பொதுத் தேர்வுகள் 02.03.2017 முதல் 31.03.2017 வரையில் 106 தேர்வு மையங்களில் நடைபெறவுள்ளது. இத்தேர்வில் 22382 மாணவர்களும் 24664 மாணவிகளும் ஆக மொத்தம் 47046 தேர்வெழுதவுள்ளனர். இதேபோல் பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வுகள் 08.03.2017 முதல் 30.03.2017 வரையில் 142 தேர்வு மையங்களில் நடைபெறவுள்ளது. இத்தேர்வில் 25246 மாணவர்களும் 24054 மாணவிகளும் ஆக மொத்தம் 49300 தேர்வர்கள் தேர்வெழுத உள்ளனர்.

மேல்நிலைப் பொதுத்தேர்விற்காக திருவள்ளூர் மாவட்டத்தில் 17 வினாத்தாள் கட்டுக்காப்பு மையங்களும் பத்தாம் வகுப்பு பொதுத்தேர்விற்காக 18 வினாத்தாள் கட்டுக்காப்பு மையங்களும் அமைக்கப்பட்டு மையம் ஒன்றிற்கு இரு வினாத்தாள் கட்டுக்காப்புாளர்கள் வீதம் 17/18 மையங்களுக்கு 34/36 வினாத்தாள் கட்டுக்காப்பாளர்கள் உரிய அலுவலர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ளது.

வினாத்தாள் கட்டுக்காப்பு மையங்களுக்கு 24 மணிநேரமும் ஆயுதம் ஏந்திய காலவர்கள் பாதுகாப்புக்காக ஏற்பாடு செய்தல். தேர்வுகள் நடைபெறும் நாட்களில் காலை 09.30 மணி முதல் மதியம் 02.00 மணிவரை தடையின்றி மின்சாரம் அளிக்க ஏற்பாடு செய்தல். தேர்வுகள் நடைபெறும் நாட்களில் மாணவர்கள் குறித்த நேரத்தில் தேர்வு மையம் சென்றடைய தாமதமின்றி பேருந்துகளை இயக்க ஏற்பாடு செய்தல். மாவட்ட ஆட்சித்தலைவர், மற்றும் மாவட்ட தேர்வுக்குழு உறுப்பினர்கள் தேர்வுகள் நடைபெறும் நாட்களில் தேர்வு மையங்களில் திடீர் பார்வை செய்தல். தேர்வில் முறைகேடுகளில் ஈடுபடுவோரை தடுக்க ஒவ்வொரு தேர்வு மையத்திற்கும் மாணவர்கள் எண்ணிக்கைக்கு ஏற்ப இரண்டு முதல் நான்கு பேர் வரை நிரந்தரமாக கண்காணிக்க 250 நிரந்தர படை உறுப்பினர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளது. முதன்மைக் கல்வி அலுவலரின் தலைமையில் தேர்வு மையங்களை திடீர் சோதனை மேற்கொள்ள 35 பேர் கொண்ட பறக்கும் படை உறுப்பினர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளது.

பொன்னேரி மற்றும் திருவள்ளூர் மாவட்டக் கல்வி அலுவலர்கள் தலைமையில் தேர்வு மையங்களை திடீர் சோதனை மேற்கொள்ள 20 பேர் கொண்ட பறக்கும் படை உறுப்பினர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளது. மெட்ரிக் பள்ளிகள் ஆய்வாளர் தலைமையில் 20 பேர் கொண்ட பறக்கும் படை உறுப்பினர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளது. இவை தவிர வருவாய் துறை / காவல் துறை அலுவலர்களால் எந்த நேரத்திலும் தேர்வு மையங்களை திடீர் சோதனை மேற்கொள்ளுதல்.

விடைத்தாள் கட்டுக்கள் அஞ்சல் துறை மூலம் அனுப்பாமல் கடந்த ஆண்டை போலவே ஒவ்வொரு வினாத்தாள் கட்டுக்காப்பிடங்களிலிருந்து தேர்வு மையங்களுக்கு வினாத்தாட்களை கொண்டு செல்லவும், தேர்வுகள் முடிந்தவுடன் விடைத்தாள் கட்டுக்களை பெறவும் 31 Route Officer நியமனம் செய்யப்பட்டுள்ளனர். Route Officer உடன் வினாத்தாள் கட்டுக்காப்பு மையங்களிலிருந்து தேர்வு மையங்களுக்கும் / தேர்வு மையங்களிலிருந்து கல்வி மாவட்ட தலைமையிடத்தில் அமைக்கவுள்ள மதிப்பீட்டு மையத்தில் விடைத்தாள் கட்டுக்களை பாதுகாப்பாக சேர்க்க 31 ஆயுதம் ஏந்திய காவலர்கள் தேவைப்படுவது.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.கே.முத்து, முதன்மைக்கல்வி அலுவலர் திரு.த.ராஜேந்திரன், திருவள்ளூர் வருவாய் கோட்டாட்சியர் திருமதி.திவ்யஸ்ரீ, அம்பத்தூர் வருவாய் கோட்டாட்சியர் திரு.வி.வீரப்பன், காவல்துறை, மின்துறை மற்றும் போக்குவரத்து துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.**
~~~~~